TNRM050044062023



**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இராமேஸ்வரம்.**

**முன்னிலை: திரு.S.B. சுஜித், B.A. B.L.,(Hons)**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 07-ம் நாள் சனிக்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 313/2023**

**(CNR.NO: TNRM05-004406-2023)**

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | அரசுக்காக,<br>சார்பு ஆய்வாளர்,<br>இராமேஸ்வரம் நகர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.46/2023 |

**1 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | பால்பாண்டி |
| 3. | த/பெ | : | தங்கவேலு |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | சத்யா நகர், இராமேஸ்வரம். |
| 6. | வயது | : | 30/2023 |

**2 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | கோபு |
| 3. | த/பெ | : | அம்மாசி |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | சத்யா நகர், இராமேஸ்வரம். |
| 6. | வயது | : | 28/2023 |

| | | | |
|---|---|---|---|
| 7. | சம்பவ நாள் | : | 11.03.2023 முதல் 12.03.2023-ம் தேதிகளில் 15.00 மணி முதல் 22.15 மணி வரை |
| 8. | புகார் தேதி | : | 14.03.2023-ம் தேதி 10.00 மணி |

| | | | |
|---|---|---|---|
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 1, 2 எதிரிகள் 16.03.2023ம் தேதி கைது செய்யப்பட்டுள்ளார்கள்.<br>மீண்டும் பிடிக்கட்டளை நிறைவேற்றப்பட்டு 03.09.2024ம் தேதி கைது செய்யப்பட்டுள்ளார்கள். |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | i)2ம் எதிரி இந்நீதிமன்ற Crl.M.P.No.1617/2023, நாள்.24.03.2023ம் தேதியிட்ட உத்தரவுப்படி 25.03.2023ம் தேதி பிணையில் சென்றுள்ளார்.<br><br>ii)1ம் எதிரி இந்நீதிமன்ற Crl.M.P.No.1680/2023, நாள்.24.03.2023ம் தேதியிட்ட உத்தரவுப்படி 25.03.2023ம் தேதி பிணையில் சென்றுள்ளார்.<br><br>iii)2ம்எதிரி இந்நீதிமன்ற Crl.M.P.No.4569/2024, நாள்.06.09.2024ம் தேதியிட்ட உத்தரவுப்படி 09.09.2024ம் தேதி பிணையில் சென்றுள்ளார்.<br><br>iv)1ம் எதிரி இந்நீதிமன்ற Crl.M.P.No.4568/2024, நாள்.06.09.2024ம் தேதியிட்ட உத்தரவுப்படி 18.09.2024ம் தேதி பிணையில் சென்றுள்ளார். |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 26.10.2023 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 16.04.2024 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 04.03.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 457, 380 இதச படி |
| 15. | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 457, 380 இதச படி |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | முதல் விசாரணை எதிரி தரப்பு குறுக்கு விசாரணை<br><br>அ.சா.1 – 28.05.2024 அ.சா.1 – 28.05.2024<br>அ.சா.2 – 28.05.2024 அ.சா.2 – 28.05.2024<br>அ.சா.3 – 28.05.2024 அ.சா.3 – 28.05.2024<br>அ.சா.4 – 15.10.2024 அ.சா.4 – 15.10.2024<br>அ.சா.5 – 15.10.2024 அ.சா.5 – 15.10.2024<br>அ.சா.6 – 05.11.2024 அ.சா.6 – இல்லை<br>அ.சா.7 – 05.11.2024 அ.சா.7 – இல்லை<br>அ.சா.8 – 10.06.2025 அ.சா.8 – 10.06.2025 |
| 18. | எதிரிகளிடம் பிரிவு 313(1)(b) Cr.P.C படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 04.03.2026 |
| 19. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட் 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 22. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | 1 வது எதிரி தரப்பில் 70(2) Crpc / 72(2) BNSS பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.600/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 31.01.2024 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.<br><br>2 வது எதிரி தரப்பில் 70(2) Crpc / 72(2) BNSS பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.680/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 02.02.2024 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 23. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு.சொக்கேசன் |
| 24. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | 1 வது எதிரி தரப்பு வழக்கறிஞர். திரு.விமல்ராஜ்<br>2 வது எதிரி தரப்பு வழக்கறிஞர். திரு.மாரிமுத்து |
| 25. | எதிரியின் கூற்று | : | எதிரிகள் தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 26. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 07.03.2026 |
| 27. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 07.03.2026 |
| 28. | நீதிபதியின் முடிவு | : | **முடிவில், 1, 2 எதிரிகள் பிரிவுகள்** 457, 380 **இதசவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பிரிவு 248(1) Cr.P.C/271(1) BNSS ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1, 2 எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்குபின் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட PR.No.47/2023 ல் வழக்குச்சொத்துக்களான Item.No.1 – கிரே கலர் Lenova என ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒன்று, Item.No.2 – AM என எழுதப்பட்ட ADMK கொடிபோட்ட 5.900 எடை கொண்ட தங்க மோதிரம் ஒன்று, Item.No.3 சுமார் 1.250 மில்லி கிராம் எடையுள்ள தங்க கம்மல் ஒரு ஜோடி, Item.No.4 – ஊதா கலர் பிளாஸ்டிக் பை ஒன்று ஆகியவைகளை புகார்தாரர் இந்நீதிமன்றத்தில் Crl.MP.No.1704/2023, நாள்.05.04.2023 உத்தரவுப்படி இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீட்டு காலத்திற்கு பின் மேற்படி சொத்துக்களை அவரே வைத்துக் கொள்ளும்படி உத்தரவிடப்படுகிறது.** |

இவ்வழக்கு 26.10.2023 தேதியன்று குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 (இனி கீழ் வரும் இடங்களில் '**குவிமுச**' என்று குறிப்பிடப்படும்) பிரிவு 190(1)ன் படி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு 04.03.2026 ம் தேதி இறுதி விசாரணைக்காக வந்தபோது குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், 1வது குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.விமல்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 2வது குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.மாரிமுத்து அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று, இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று வரை இந்த நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

1.அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:

இவ்வழக்கின் புகார்தாரர் இராமேஸ்வரம் சத்தியாநகரைச் சேர்ந்த மஞ்சுளா மற்றும் அவரது குடும்பத்தார்கள் வெளியூர் சென்றிருப்பது தெரிந்து 1, 2 எதிரிகள் சேர்ந்து 12.03.2023–ம் தேதி இரவு சுமார் 21.30 மணிக்கு சத்தியா நகரில் உள்ள மஞ்சுளா வீட்டின் முன்பக்க கேட் வழியாக ஏறிகுதித்து உள்ளே சென்று வீட்டின் மேற்குபக்கம் உள்ள சந்து பாதை வழியாக வீட்டின் பின்பக்கம் சென்று 1, 2 எதிரிகள் சேர்ந்து பின்வாசல் கதவை தள்ளி திறந்து 2வது எதிரி வெளியே நின்று நோட்டமிட்டுக்கொண்டும், 1வது எதிரி வீட்டின் உள்ளே சென்று TV ஸ்டான்ட் கீழே இருந்த லெனோவா லேப்டாப்பை எடுத்தும் உள்ளே இருந்த பீரோவை திறந்து AM என்று எழுதி ADMK கொடி போட்ட 6 கிராம் தங்க மோதிரம் மற்றும் 3 கிராம் எடை கொண்ட 1 ஜோடி தங்கதோட்டை திருடி சென்று குற்றம் புரிந்ததாக குற்றம்சாட்டப்பட்டவர்களான 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 457, 380 இந்திய

தண்டனை சட்டம், 1860 (இனி கீழ் வரும் இடங்களில் '**இதச**' என்று குறிப்பிடப்படும்) படி இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு குவிமுச பிரிவு 204 கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பியதன் பெயரில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்த நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 குவிமுச படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் வழங்கிய பின்பு குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால் இந்த நீதிமன்றம் பிரிவு 240(1) குவிமுச படி குற்றம் சாட்டப்பட்டவர்களான 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 457, 380 இதச படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த பிரிவு 242(1) குவிமுச கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 புகார்தாரர், அ.சா.2 முதல் அ.சா.4 சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சிகள், அ.சா.5, அ.சா.6 பார்வை மகஜர் சாட்சிகள், அ.சா.7 ஒப்புதல் வாக்குமூல சாட்சி, அ.சா.8 புலன்விசாரணை அதிகாரி

5. **<u>அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:</u>**

அ.சா.1 மஞ்சுளா தனது சாட்சியத்தில் தான் இராமேஸ்வரம் சத்யா நகரில் வசித்து வருவதாகவும், தான் வீட்டுக்குடித்தனம் செய்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியும் எனவும், சுமார் 1 வருடத்திற்கு முன்பு தன் வீட்டிலிருந்து அனைவரும் தூத்துக்குடிக்கு விழாவிற்காக சென்றிருந்ததாகவும், செல்லும்போது எங்கள் வீட்டு கதவை பூட்டி சாவியை சுவிட்ச் போர்டு முன்பு வைத்து விட்டு சென்றுவிட்டதாகவும், இரண்டு நாட்கள் கழித்து வீட்டிற்கு இரவு 10.00 மணிக்கு வந்து சாவியை எடுத்து உள்ளே சென்று பார்த்தபோது டிவி ஸ்டாண்டில் இருந்த லேப்டாப் காணாமல் போயிருந்தததாகவும், பின்னர் சந்தேகப்பட்டு பீரோவை திறந்து பார்த்தபோது 4 கிராம் எடையுள்ள ADMK கொடி பதிக்கப்பட்ட தங்க மோதிரம் ஒன்று, 2 கிராம் எடையுள்ள ஒரு ஜோடி தங்க தோடு, தங்க கல்பதிக்கப்பட்ட மூக்குத்தி ஒன்று ஆகியவைகள் காணாமல் போயிருந்ததாகவும், லேப்டாப்பின் மதிப்பு ரூ.50,000/- எனவும், மறுநாள் காலை நகர் காவல்நிலையத்தில் தான் காணாமல் போன பொருட்களை பற்றி சொல்லி புகார் மனு கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார்மனு தான் கொடுத்ததுதான் எனவும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் எனவும், அந்த புகார் மனு அ.சா.ஆ.1 எனவும், சில நாட்கள் கழித்து காணாமல் போன பொருட்கள் கிடைத்துவிட்டதாக நகர் காவல்நிலையத்தில் இருந்து தனக்கு தகவல் வந்ததாகவும், அதன்பின்னர் தான் நீதிமன்றத்தில் மனு செய்து காணாமல் போன பொருட்களை பெற்றுக்கொண்டதாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 குருசாமி தனது சாட்சியத்தில் தான் இராமேஸ்வரம் சத்யா நகரில் வசித்து வருவதாகவும், தான் 108 ஆம்புலன்சில் மருத்துவ உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியும் எனவும், சுமார் 1 வருடத்திற்கு முன்பு விசேசத்திற்காக வீட்டை பூட்டிவிட்டு சாவியை சுவிட்ச் போடு மீது வைத்து விட்டு

அனைவரும் தூத்துக்குடிக்கு சென்றுவிட்டதாகவும், விசேசம் முடிந்து இரண்டு நாட்கள் கழித்து வீட்டிற்கு மாலை 06.00 மணியளவில் வந்து வீட்டை திறந்து பார்த்தபோது தன் மனைவி லேப்டாபை காணவில்லை என்று கூறியதாகவும், பின்னர் பீரோவில் வைத்திருந்த AM என்று பொறிக்கப்பட்ட அரை கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று, ஒரு ஜோடி தங்க தோடு ஆகியவைகள் காணாமல் போய்விட்டதாக தன் மனைவி கூறியதாகவும், தான் வீட்டிற்குள் தேடிபார்த்து கிடைக்கவில்லை எனவும், அதனால் தான் மறுநாள் வேலைக்கு சென்றுவிட்டதாகவும், தான் வேலைக்கு சென்றுவிட்டு திரும்பி வந்து நகர் காவல்நிலையத்தில் தன் மனைவி புகார் கொடுத்ததாகவும், எதிரிகளை கடற்கரையில் கைது செய்து நகர் காவல்நிலைய போலீசார் காணாமல் போன பொருட்களை அடையாளம் காட்ட சொன்னதாகவும், பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து மேற்படி பொருட்களை பெற்றுக்கொண்டதாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 அழகர் தனது சாட்சியத்தில் தான் இராமேஸ்வரம் சத்யா நகரில் வசித்து வருவதாகவும், தான் கூலி வேலை செய்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியும் எனவும், தாங்கள் விசேசத்திற்கு ஊருக்கு சென்றிருந்ததாகவும், பின்னர் விசேசம் முடிந்து வீட்டிற்கு வந்து பார்த்தபோது அ.சா.1 வீட்டில் உள்ள லேப்டாப், மோதிரம் ஒன்று, ஒரு ஜோடி தங்க தோடு, ஒரு மூக்குத்தி ஆகியவைகள் காணாமல் போயிருந்ததாக சொன்னதாகவும், வீட்டில் இரண்டு நாட்கள் தேடிப்பார்த்து விட்டு பின்னர் காவல்நிலையம் சென்று அ.சா.1 புகார் கொடுத்தாகவும், ஆஜர் எதிரிகள் மேற்படி பொருட்களை திருடியதாக போலீசார் சொன்னதாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 மாரி தனது சாட்சியத்தில் தான் இராமேஸ்வரம் சத்யா நகரில் வசித்து வருவதாகவும், தான் மீன் வியாபாரம் செய்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியும்

எனவும், தேதி மாதம் ஞாபகம் இல்லை எனவும், தன் வீட்டில் மோதிரம், தோடு, லேட்பாப் ஆகியவை காணாமல் போனதாகவும், அதற்காக தனது மருமகள் நகர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், போலீசார் விசாரணை செய்தபோது பாண்டி என்பவர்தான் எடுத்தார் என்று தங்களுக்கு தெரியவந்ததாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.5 கருப்பசாமி தனது சாட்சியத்தில் தான் இராமேஸ்வரம் சத்யா நகரில் வசித்து வருவதாகவும், தான் மீன் வியாபாரம் செய்து வருவதாகவும், தேதி மாதம் வருடம் தெரியாது எனவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகரில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையதுதான் எனவும், போலீசார் கேட்டுகொண்டததன்பேரில் போட்டேன் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.6 சிவா தனது சாட்சியத்தில் தான் இராமேஸ்வரம் சத்யா நகரில் வசித்து வருவதாகவும், மீன்வியாபாரம் செய்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் எனவும், அது அ.சா.ஆ.2 எனவும், அதை தான் நகர் காவல்நிலைய போலீசார் கேட்டுக்கொண்டதற்காக சத்யா நகரில் வைத்து போட்டதாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.7 அஜீத்குமார் தனது சாட்சியத்தில் தான் இராமேஸ்வரம் சத்யா நகரில் வசித்து வருவதாகவும், தான் ஓட்டுநராக வேலை செய்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியும் எனவும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது எனவும், அந்த கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.3, அ.சா.ஆ.4 எனவும், அதை தான் நகர் காவல்நிலையத்தில் வைத்து போட்டதாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை

என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.8 கோட்டைச்சாமி தனது சாட்சியத்தில் தான் தற்சமயம் சார்பு ஆய்வாளராக பாம்பன் காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கின் முதற்கட்ட விசாரணையை உதவி ஆய்வாளர் வசந்த் குமார் என்பவர் மேற்கொண்டுள்ளதாகவும், தான் 11.05.2023ம் தேதியன்று வழக்கு கோப்பை பெற்றுக்கொண்டு வழக்கு சொத்து 3 கிராம் ஒரு தங்க தோடு, 6 கிராம் எடையுள்ள தங்க மோதிரம், lenova laptop ஆகியவற்றை படிவம்–95 மூலமாக நீதிமன்றத்தில் ஒப்படைத்து PR.No.47/2023 பெற்றதாகவும், அந்த படிவம்–95 அ.சா.ஆ. 5 எனவும், இறுதியாக தனது விசாரணையை முடித்து எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள். 457, 380 இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>Questioning U/s.313(i)(b) Cr.P.C</u>**

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களான 1, 2 எதிரிகளுக்கு பாதகமாக உள்ளவை குறித்து 313(1)(ஆ) Cr.P.C–ன் கீழ் விளக்கி வினவியபோது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார்கள். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.

**<u>Point for determination</u>**

**7. இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்டவரான 1, 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 457, 380 இதச படியான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.**

## இருதரப்பு வாதங்கள்

8. இவ்வழக்கில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 தனது வாதத்தில் புகார்தாரர் அ.சா.1, சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.4 மற்றும் அ.சா.8 புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளரின் சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே, குற்றம் சாட்டப்பட்டவர்களான 1, 2 எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது.

9. குற்றம்சாட்டப்பட்டவர்களான 1, 2 எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்கள் தனது வாதத்தில், புகார்தாரர் அ.சா.1, அ.சா.2 முதல் 4 வரையிலான சாட்சிகள் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், எதிரிகள் தான் திருடினார்கள் என்றும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற புலன்விசாரணை அதிகாரியான வழக்கு பட்டியல் சாட்சி 9 திரு.வசந்தகுமார் விசாரிக்கப்படவில்லை என்றும், அவரை விசாரித்தால் தான் வழக்கின் உண்மை தன்மை தெரியும் என்றும், இவ்வழக்கின் வழக்குச் சொத்துக்களை ஒப்படைத்த அ.சா.8 புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளரின் சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சாட்டப்பட்டவர்களான 1, 2 எதிரிகள் குற்றவாளி என்று முடிவு செய்ய முடியாது. எனவே, குற்றம்சாட்டப்பட்டவர்களான 1, 2 எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

## Appreciation of Evidence

10. இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 மஞ்சுளா, அ.சா.2 குருசாமி என்பவர்கள் தங்களது நீதிமன்ற முதல்விசாரணையில் ஒரு வருடத்திற்கு முன்பாக தங்கள் வீட்டை பூட்டி சாவியை சுவிட்ச் போர்டு அருகே வைத்து சென்றதாகவும், பின்பு இரண்டு நாட்கள் கழித்து இரவு 10.00 மணியளவில் வந்து பார்த்தபோது லேப்டாப் ஒன்று,

4 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று, இரண்டுகிராம் எடையுள்ள ஒரு ஜோடி தங்க தோடு ஒன்று ஆகியவை பீரோவில் வைக்கப்பட்டு காணாமல் போயிருந்ததாகவும், அது தொடர்பாக இராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார் மனு அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

11. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் சம்பவ தேதி ஆகியவற்றை குறிப்பிடாமல் சாட்சியம் அளித்திருந்தாலும், களவு போன நகைகள் மற்றும் களவு போன விதம் தொடர்பாக புகார் மனு மற்றும் போலீசார் விசாரணை வாக்குமூல சங்கதிகளை ஒத்திசைந்து சாட்சியமளித்துள்ளார்கள். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் குறுக்கு விசாரணையின் போது புகார் மனு சம்பவம் நடந்த தினத்தன்று கொடுக்கப்படாதது தொடர்பாகவும், மூன்று மாதங்கள் கழித்து தான் பொருட்கள் கிடைத்தது தொடர்பாகவும் வெளிக்கொணரப்பட்டது. அ.சா.2 குருசாமி தனது முதல்விசாரணையில் எதிரிகளை கடற்கரையில் வைத்து கைது செய்து நகர் காவல் நிலையத்தில் வைத்து காணாமல் போன பொருட்களை அடையாளம் காண்பித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

12. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.3 அழகர், அ.சா.4 மாரி ஆகியோர்களது சாட்சியங்கள் மூலம் மேற்சொன்னவர்கள் சம்பவத்தை பொறுத்து கேள்வியுற்ற சாட்சியங்கள் என்றும் நேரடியாக சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் அல்ல என்பதும் தெரிய வருகிறது. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரும் களவு போனதாக முன்னிடப்படும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் அல்ல என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

13. எனவே, இவ்வழக்கில் எதிரிகளிடம் கைப்பற்றதாக சொல்லப்படும் களவு போன லேப்டாப் மற்றும் நகைகள் ஆகியவை தொடர்பாக மற்ற அரசுத்தரப்பு சாட்சியங்களை ஆராய்வது உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சிகளாக முன்னிடப்பட்டு அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.7 அஜீத்

குமார் என்பவர் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பங்கள் நகர் காவல் நிலையத்தில் வைத்து மேற்கொண்டதாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.7 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் செம்மடம் பேருந்து நிறுத்தம் அருகே தானும், சோனை முத்து என்பவரும் நின்று கொண்டிருந்த போது ஒப்புதல் வாக்குமூலம் 1ம் எதிரியிடம் இருந்து பெறப்பட்டதாகவோ அதன் அடிப்படையில் 13.03.2023ம் தேதியன்று 1ம் எதிரியின் வீட்டின் பின்பக்கம் மணல்பகுதியில் பிளாஸ்டிக்கில் சுற்றி வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கில் களவு போன லேப்டாப், தங்க மோதிரம், தங்க தோடு ஆகியவை கைப்பற்றப்பட்டதாகவோ எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை. அ.சா.7 முதல் விசாரணை சாட்சியம் அவரது போலீசார் விசாரணை வாக்குமூலம் மற்றும் அரசுத்தரப்பு ஆவணங்களுக்கு முரண்பட்டு நம்பகத்தன்மையற்ற வகையில் அமையப்பெற்றுள்ளது. அரசுத்தரப்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டு நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு அ.சா.7 குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை. மேலும், இவ்வழக்கின் அ.சா.2 என்பவர் இராமேஸ்வரம் கடற்கரை காவல் நிலையத்திற்கு உட்பட்ட கடற்கரையில் வைத்து எதிரிகளைக் கைது செய்ததாக சாட்சியமளித்துள்ளது அரசுத்தரப்பில் முன்னிடப்படும் வழக்கை மேலும் பாதிப்படையச் செய்கிறது. எதிரிகள் எங்கு வைத்து கைது செய்யப்பட்டார்கள் என்பது தொடர்பாக சந்தேகத்தை உண்டாக்குகிறது.

14. இவ்வழக்கில் மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியான சோனை முத்து என்பவர் அரசுத்தரப்பில் சாட்சியாக முன்னிடப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படவில்லை. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட பார்வை மகஜர் சாட்சிகள் அ.சா.5 கருப்பசாமி மற்றும் அ.சா.6 சிவா ஆகியோர்கள் மூலமாக சம்பவ இடமானது சத்யா நகரில் அமையப்பெற்றுள்ள அ.சா.1ன் வீடு என்பதும், சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டதாகவும்

அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை.

15. மேற்சொன்ன நிலையில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.8 கோட்டைச்சாமி என்பவர் படிவம்−95 மூலமாக வழக்குச்சொத்துக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் முதற்கட்ட புலன்விசாரணை அனைத்தும் உதவி ஆய்வாளர் வசந்தகுமார் என்பவரால் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இந்நீதிமன்றத்தில் சார்பு ஆய்வாளர் வசந்தகுமார் அவர்களின் விசாரணைக்காக கடந்த 05.11.2024 தேதி முதல் 04.03.2026 வரை வழக்கு நிலுவையில் இருந்து வந்தது. இந்நீதிமன்றம் மூலமாகவும், அரசுத்தரப்பு மூலமாகவும் மேற்சொன்ன சார்பு ஆய்வாளருக்கு 10.06.2025, 24.06.2025, 12.08.2025, 25.11.2025, 09.12.2025 ஆகிய தேதிகளில் மின்னஞ்சல் மூலமாக அரசுத்தரப்பில் ஆஜராகும்படி அறிவிப்பு அனுப்பியும் திண்டுக்கல் மாவட்டத்தில் அம்பாத்துறை மற்றும் கொடைக்கானல் காவல் நிலைய சட்ட, ஒழுங்கு பிரச்சனை காரணமாக ஆஜராக இயலவில்லை என்று பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. மேற்சொன்ன பதில் அறிவிப்பில் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் சுமார் ஆறு மாத காலத்திற்கு மேல் வழக்கு விசாரணையானது ஒத்திவைக்கப்பட்டு நிலுவையில் இருந்தது. மேற்சொன்ன நிலையில் தகுந்த வாய்ப்பளித்தும் உதவி ஆய்வாளர் ஆஜராகாத காரணத்தினால் 09.12.2025ம் தேதியன்று மேற்சொன்ன உதவி ஆய்வாளருக்கு எதிராக சாட்சி பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. சாட்சி பிடியாணையானது அரசுத்தரப்பில் நிறைவேற்றப்படாமல் நிலுவையில் இருந்து வந்த காரணத்தினால் இந்நீதிமன்றம் விதி 31(7) குற்றவியல் நடைமுறை விதிகள் 2019ன் படி இராமேஸ்வரம் உதவி காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு மேற்சொன்ன பிடியாணையை நிறைவேற்றும்படி இந்நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இருப்பினும், அரசுத்தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் எதிரிகளின் மீதான விசாரணையை விரைந்து முடிக்கப்பட

வேண்டுமென்ற அரசியல் சாசன அடிப்படை உரிமைகளைக் கருத்தில் கொண்டும் இந்நீதிமன்றம் சார்பு ஆய்வாளர் வசந்தகுமார் அவர்களின் சாட்சியமானது தன்னிச்சையாக முடித்து வைக்கப்பட்டது.

16. எனவே, இவ்வழக்கில் மேற்கொள்ளப்பட்ட புலன்விசாரணை தொடர்பாகவும், 1ம் எதிரி தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அதன் அடிப்படையில் இவ்வழக்கு சொத்துக்கள் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்பது தொடர்பாகவும் அரசுத்தரப்பில் எவ்வித சாட்சியங்களும் முன்னிடப்படவில்லை. அரசுத்தரப்பில் முன்னிடப்பட்ட ஒப்புதல் வாக்குமூல சாட்சியும் அரசுத்தரப்பு வழக்கை ஆதரித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

17. எனவே, இவ்வழக்கில் 1ம் எதிரியிடம் தன்னிச்சையாக பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பிரிவு.27 இந்திய சாட்சிய சட்டத்தின் படியாக இவ்வழக்கில் களவு போன லேப்டாப் மற்றும் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டதாக நிரூபிக்கப்படாத நிலையில் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் பிரிவு.25 இந்திய சாட்சிய சட்டத்தின் படி ஏற்றுக்கொள்ள இயலாத ஆவணமாகிறது. களவு போன பொருட்கள் 1 மற்றும் 2ம் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக நிரூபிக்கப்படாத நிலையில் பிரிவு.114 இந்திய சாட்சிய சட்டத்தின் படியான அனுமானங்களை இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ள இயலாது.

18. எனவே, இவ்வழக்கில் 1 மற்றும் 2ம் எதிரிகள் கடந்த 12.03.2023ம் தேதியன்று சத்யா நகரில் உள்ள அ.சா.1ன் வீட்டிற்குள் இரவு சுமார் 09.30 மணியளவில் முன்பக்க கேட் வழியாக ஏறி குதித்து பின்வாசல் வழியாக 1ம் எதிரி உள்ளே சென்றும், 2ம் எதிரி வெளியில் நின்று நோட்டமிட்டும், 1ம் எதிரி அ.சா.1 வீட்டினுள் டிவி ஸ்டேண்ட் அருகே உள்ள லேப்டாப் மற்றும் பீரோவில் வைக்கப்பட்டிருந்த 4 கிராம் தங்க மோதிரம் மற்றும் இரண்டு கிராம் எடையுள்ள தங்க தோடு 1 ஜோடி ஆகியவற்றை திருடியதன்

மூலமாக பிரிவு.457, 380 இதசன் கீழ் குற்றம் புரிந்ததாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது. அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது

19. முடிவாக, குற்றம் சாட்டப்பட்டவர்களான 1, 2 எதிரிகள் பிரிவுகள் 457, 380 இதசவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பிரிவு 248(1) Cr.P.C/271(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1, 2 எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்குபின் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

20. மேலும் இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட PR.No.47/2023 ல் வழக்குச்சொத்துக்களான Item.No.1 – கிரே கலர் Lenova என ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒன்று, Item.No.2 – AM என எழுதப்பட்ட ADMK கொடிபோட்ட 5.900 எடை கொண்ட தங்க மோதிரம் ஒன்று, Item.No.3 சுமார் 1.250 மில்லி கிராம் எடையுள்ள தங்க கம்மல் ஒரு ஜோடி, Item.No.4 – ஊதா கலர் பிளாஸ்டிக் பை ஒன்று ஆகியவைகளை புகார்தாரர் இந்நீதிமன்றத்தில் Crl.MP.No.1704/2023, நாள்.05.04.2023 உத்தரவுப்படி இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீட்டு காலத்திற்கு பின் மேற்படி சொத்துக்களை அவரே நிரந்தர பராமரிப்பில் வைத்துக்கொள்ளும்படி உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.07 16:48:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**பின்னிணைப்பு :–**

**(i) அரசுத் தரப்பு சாட்சிகள்:**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | – | மஞ்சுளா | புகார்தாரர் |
| அ.சா.2 | – | குருசாமி | கேள்வியுற்ற சாட்சி |
| அ.சா.3 | – | அழகர் | கேள்வியுற்ற சாட்சி |
| அ.சா.4 | – | மாரி | கேள்வியுற்ற சாட்சி |
| அ.சா.5 | – | கருப்பசாமி | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | – | சிவா | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.7 | – | அஜீத்குமார் | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| அ.சா.8 | – | கோட்டைச்சாமி | புலன்விசாரணை அதிகாரி |

**(ii) அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 14.03.2023 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 14.03.2023 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 16.03.2023 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 16.03.2023 | அத்தாட்சியில் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | 16.03.2023 | படிவம்–95 |

**(iii) அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை**

**(vi) எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் :**

இல்லை.

TNRM050044062023



**<u>குறிப்பு:</u>**

1. எந்த ஒரு சாட்சியும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2. வழக்கின் முடிவு குறித்து காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

3. வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற பிணையில் இருந்தார்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.07 16:48:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.